Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சோழர்கால கட்டிடக்கலையில் நாயக்கர் கால சுவரோவியங்கள்

க. சிங்காரவடிவேல் [1] & முனைவர். P. கோவிந்தராஜன்[2]

16

[1]முனைவர் பட்ட ஆய்வு மாணவர், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலை பல்கலைக் கழகம்,நுண்கலைத்துறை. singaravelchola1979@gmail.com
[2]விரிவுரையாளர், அரசு கட்டிக்கலை மற்றும் சிற்பக்கலைக்கல்லூரி, மாமல்லபுரம், தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்**:

மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து அவன் தனக்கான வாழ்விடத்தை குகைகளில் அமைத்துக் கொள்ள முற்பட்ட காலகட்டத்தில் தனது பார்வையில் குறிப்பிடும்படியாக பதிவு செய்த ஓவியங்கள் முதல் இன்றைய காலகட்டத்தில் ஒளியையும், அலைக்கற்றைகளையும் கொண்டு வரையப்படும் ஓவியங்கள் வரை மனிதனுடைய வாழ்வில் பிரிக்க முடியாத ஒரு அங்கமாகவும், மனிதகுல வரலாற்றை இந்த உலகிற்கு வெளிப்படுத்த உதவும் ஒரு கருவியாகவும் ஓவியம் இருந்து வருகிறது. குகைகளில் வாழ்ந்த மனிதன் தனக்கான வாழ்விடங்களை அமைத்துக் கொள்ள முனைந்த போது அவர்களுக்கான வழிபாட்டுத் தலங்களையும் உருவாக்கிக் கொண்டான். அவ்வாறு உருவாக்கிக் கொண்ட வழிபாட்டுத்தலங்களில் தான் வணங்கிய கடவுளர்களின் உருவங்களையும், ஆன்மீக வரலாற்றையும், புராண கதைகளையும் சுவர்களில் நூற்றாண்டுகள் கடந்தும் அழியா வண்ணம் பாதுகாப்புடன் ஓவியங்களாக வரைந்து சென்றிருக்கிறான். அவ்வாறு வரையப்பட்ட ஓவியங்கள் இன்றைய நிலையில் முறையான பராமரிப்பின்றி உள்ளன. தமிழகத்தில் உள்ள சில கோயில்கள் தவிர பல இடங்களில் காப்பாற்றப்பட வேண்டிய சூழலில் சுவரோவியங்கள் தள்ளப்பட்டுள்ளன. நம்மால் முடிந்தவரை பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரையப்பட்டிருக்கும் இந்த காலத்தால் அழியா ஓவியங்களை காப்பாற்ற முயற்சிக்க வேண்டும். ஒரு கோவிலில் எத்தனை ஆண்டுகளாக திருவிழாக்கள் நடத்தப்பட்டிருந்தாலும், அது அந்த கோவிலை வெளியிலிருந்து மேலோட்டமாக பார்க்கும் மக்களுக்கு தெரியப்போவதில்லை. ஆனால், அந்த கோவிலின் கட்டிடக்கலையும் அதில் உள்ள சிற்பங்களும், ஓவியங்களும் வரலாற்றையும், அந்த காலகட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் முறைகளையும், அவர்கள் கொண்டாடிய திருவிழாக்களையும் நம் கண் முன்னே இன்றும் நிலை நிறுத்துகின்றன. ஆகவே கோயில்கள் எந்த அளவுக்கு பராமரிக்கப்படுகின்றனவோ, குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்படுகின்றனவோ, அதைப்போலவே கோவில்களில் உள்ள சுவர் ஓவியங்களும் பாதுகாக்கப்பட வேண்டும்.

**குறியீட்டு சொற்கள்:**

குகைகள், சுவரோவியங்கள், சித்திரமாடம், கோயில், டெம்பரா

**முன்னுரை:**

சூரிய பகவான், தஞ்சையை அடுத்த திருவையாறில் உள்ள ஐயாறப்பர் கோயிலுக்கு தனது

மனைவிமார்கள் உஷா தேவி, பிரத் உஷா தேவி ஆகியோருடன்வந்து தங்கியிருந்து, தனது பெயரால் அமைந்த சூரிய தீர்த்தத்தில் நீராடி சாமி தரிசனம் செய்துள்ளார். இந்த சம்பவத்தை தேவாரம் பாடிய ஆசிரியர்களில் ஒருவரான திருநாவுக்கரசர், **"ஆழிவலவன் நின்று ஏத்தும் ஐயாறு"** என்று தனது பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

இன்றும் திருவையாறு ஐயாறப்பர் கோயில் சோமாஸ்கந்தர் மண்டபத்தில் சூரியன் இரு கரங்களிலும் தாமரை மலர் ஏந்தி நிற்க அவரது இருபுறமும் சூரியனின் தேவியர் இருவரும் நிற்பதைப் போன்ற ஓவியம் தீட்டப்பட்டுள்ளதைக் காணலாம். தென் கைலாயம் என்ற சிறப்புப் பெயரும் திருவையாறு ஐயாறப்பர் கோயிலுக்கு உண்டு. சமயக்குரவர்களில் ஒருவரான அப்பருக்கு சிவ பெருமான் திருவையாற்றில் கயிலைக்காட்சியினைக் காட்டி அருள் புரிந்தாகவும், இதனால் வடக்கே காசிக்கு தீர்த்த யாத்திரை செல்ல முடியாத பக்தர்கள் தென் கயிலாயமான திருவையாறு வந்தால் காசிக்குச் சென்ற பலன் கிடைக்கும் என்று தல புராணம் கூறுகிறது. சூரியனுடைய வழியில் வந்த ஸ்ரீராமன் இந்தக் கோயிலுக்கு வந்து இறைவனை பூஜித்து வணங்கினார் என்கிறது வரலாறு.

பொதுவாக சிவாலயங்களில் நவக்கிரகங்கள் வேறு வேறு திசையில் இருக்கும். இதற்கு நேர் மாறாக திருவையாற்றில் நவக்கிரகங்களில் ஏனைய எட்டு கிரகங்கள் சூரியனையே பார்த்து நிற்கின்றனர்.

பொங்கல் திருநாளில் ஐயாறப்பர், பாரிவேட்டை என்ற விழாவில் பங்கேற்க கால்நடைகளை ஓட்டிச் செல்வது போன்ற காட்சி கோயிலின் திருச்சுற்று மாளிகையில் வரையப்பட்டுள்ளது. இந்தச் சித்திரங்கள் 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இக்கோயில் தஞ்சாவூரிலிருந்து வடக்கு திசையில் 13 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.

தலவரலாறு:

திருக்கோயில் முதன் முதலில் பிரியவிரதன் எனும் சூரிய வம்ச சக்கரவர்த்தியால் திருப்பணி செய்விக்கப்பட்டதாக வரலாறு. கிமு முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த சோழப்பேரரசன் **கரிகாற் பெருவளத்தான்-** இவன் காடு கெடுத்து நாடாக்கி வளம் பெருக்கியவன், கல்லணையைக் கட்டி, காவிரிக்கு கரையும் எழுப்பி, இமயத்தே புலி பொறித்து வெற்றியுடன் வரும் வழியில் ஐயாற்றை அடைந்ததும் அவன் ஏறி வந்த தேர் பூமியில் அழுந்தி இடம் பெயரவில்லை. இதன் அடியில் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது என உணர்ந்து காட்டை அழித்து பூமியை அகழ்ந்தான். அடியில் சிவலிங்கம், சக்தி, (ஆதி) விநாயகர், முருகன், சப்தமாதர்கள், சண்டர், சூரியன் திருவுருவங்களும், யோகி ஒருவரின் சடைகள் பறந்து விரிந்து புதைந்து வேரூன்றியும் காணப்பட்டன. மேலும் அகலவே நியமேசர் எனும் அகப்பேய்ச்சித்தர் நிட்டையில் இருப்பது கண்டு மெய்விதிர்ப்பெய்தி அவர் பாதம் பணிந்தான். அவரும் கருணை கூர்ந்து கரிகாலனிடம், தேவர்களும், நந்தீசரும் வழிபட்ட இம்மகாலிங்கத்திற்கும் மற்றைய படிமங்கட்கும் கோயில் எடுப்பாயாக எனக் கூறி எவராலும் வெல்லற்கரிய தண்டம் ஒன்றும் அளித்து, கோவில் கட்டுவதற்கு வேண்டிய பொருளும் நந்தியின் குளம்படியில் கிடைக்கும் எனக்கூறி அருள்புரிந்தார். அவ்வாறே கரிகாற்சோழன்,சிறப்பாக ஆலய திருப்பணி செய்து குடமுழுக்கும் செய்து நிவந்தங்களும் அளித்தான். கரிகாற்சோழனுக்கு ஐயாரப்பரே எல்லாம் வல்ல சித்தர் வடிவில் வந்து, தான்தோன்றிநாதராக சுயம்பு வடிவிலுள்ள தன் இருப்பிடம் காட்டி கோவிலும் கட்டச் செய்தார்

என்பதறிந்தோம். இதற்குச்சான்று கர்ப்பக்கிரக பிரகாரத்தில் விரிசடை படர்ந்து இருப்பதால் அதை சென்று மிதிக்க கூடாது என்பதும், சோழனால் கட்டப்பட்ட செம்பிய மண்டபமே செப்பேச மண்டபமாய் இருப்பதும், கரிகாற்சோழன் அவன் மனைவி இருவரின் சிலைகள் இருப்பதும் கண்டு உணரலாம்.

*கி.பி 825 - 850 தெள்ளாறெறிந்த நந்தி வர்ம பல்லவன் காலத்திற்கு முந்தைய திருப்பணி ஆதி கோயில் அமைப்பை மாற்றியுள்ளது. அருள்மிகு ஐயாரப்பர் எழுந்தருளியுள்ள கருவறைக்கற்றளி (கோயில்), துவாரபாலகர், யாளித்தூண்கள் பல்லவர் காலப்பணியாகும்.

*கி.பி 982ல் வேங்கி நாட்டு விமலாதித்த தேவர் இதனை புதுப்பித்து மகாதேவருக்கு நிறைய அணிகலன்கள் வழங்கியுள்ளார்.

*கி.பி 1006ஆம் ஆண்டில் **முதலாம் இராசராசன்** (985 - 1014) மனைவி **ஒலோகமாதேவியார் வடகைலாயம்** எனும் **ஒலோக மாதவிச்சுரத்தை** எழுப்பி,
எழுந்ததும் திருமேனிகள் **ஒலோக வீதிவிடங்கர்** எனும் சோமாஸ்கந்தர், விநாயகர், முதலான பஞ்சமூர்த்திகளை வழங்கியுள்ளார்.
*கி.பி 1014 - கி.பி 1042 ல் முதலாம் ராஜேந்திரசோழ தேவர் மனைவி பஞ்சவன்மாதேவியார் தென் கைலாயம் கோயில் பழுதுபட்டு இருந்ததை புதுப்பித்தார். அடுத்து கிருஷ்ணராஜ உடையாரால் இக்கோயிலின் திருச்சுற்றுமாளிகை எடுக்கப்பட்டுள்ளது. சலவை தூண்கள் சாளுக்கிய நாட்டு வாகாடகச்சிற்பத்திறனை எடுத்துக்காட்டவே பகைவர் நாட்டிலிருந்து கொணர்ந்தவையாக உள்ளன.
*கி.பி 1118 - கி.பி 1135 விக்கிரம சோழன் காலத்தில் மூன்று மற்றும் நான்காம் திருச்சுற்றுக்களும், மதில், கீழகோபுரங்களும் எடுக்கப்பட்டிருப்பதுடன் வடகிழக்கில் நூற்றுக்கால் மண்டபம் அடிப்படை பீடத்துடன் எழும்பி நின்று விட்டது. கி.பி 1381- ல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சியில் வீர சரவணா உடையார் காலத்து செந்தலைக்கருப்பூர், கச்சிவீரப் பெருமான் மகளால், கோவில் மண்டபமதில் சீர்திருத்தம் பெற்றது.
* கி.பி 1530 -ல் அச்சுதப்ப நாயக்கர் நின்று போன (தண்டபாணி கோயில்) மண்டபத்தை 144 தூண்கள் உடைய அழகிய மண்டபமாக உருவாக்கி முடித்தார். அவர் காலத்து இடைமருதூர் ஆணையப்ப பிள்ளையாலும், அவர் தம்பி வைத்தியநாதராலும் மேலக்கோபுரம், முதற்பிரகாரம், அதில் திருநடமாளிகைப்பத்தி (மாடி) மூன்றாம் பிரகாரத்திற்கு கோபுரம், திருக்குளம், காவிரி பூசை படித்துறை, கல்யாணசிந்து மண்டபம், குதிரை பூட்டிய தேர் மண்டபங்கள் ஆகிய இவை யாவும் அவர்களால் எடுக்கப்பட்டனவே.
*கிபி 1784 இல் காஞ்சிபுரம் வள்ளல் பச்சையப்ப முதலியார் மூன்றாம் பிரகார முகப்பு மண்டப திருப்பணி செய்துள்ளார். அவரும், அவரது இரு மனைவியர் திரு உருவங்களும் தூண்களில் உள்ளன. மூன்றாம் பிரகார கிழக்கு கோபுரம் விக்கிரம சோழனால் கட்டப்பட்டதாகும்.

* கி.பி 1937 இல் நாம் அறிந்த வகையில் அம்மன் கோயில் முழுமையும் அழகொழுகும் பளிங்கு கற்கள் திருப்பணியாக தேவகோட்டை சிவத்திரு உ. ராம.சுப.சேவு. மெய்யப்ப செட்டியார் அவர்கள் குடும்பத்தினரால் திருப்பணி செய்யப்பெற்று, 2-5-1937 இல் குடமுழுக்கு இனிதே நிறைவேறி உள்ளது.
* கி.பி 1971-இல் திருக்கைலாயப் பரம்பரை தருமபுர ஆதீனம் 25 வது குரு மகா சன்னிதானம் கையிலை ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் அவர்களால் திருக்கோயில் முழுமையும் செப்பமுற திருப்பணி செய்யப்பட்டு 31- 3- 1971-இல் திருக்குடமுழுக்குப் பெருவிழா சீரும் சிறப்புமாக நிகழ்ந்தேறியது.

திருக்கோயில் பரம்பரை அறங்காவலர் தருமைஆதீனம் 26 ஆவது குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகளவர்கள் ஆட்சிக் காலத்தில் இக்கோயில் கோபுரங்கள், விமானங்கள் பழுது பார்க்கப்பட்டு செப்பு கலசங்கள் வைத்தும் புராண வரலாற்று சித்திரங்களை புதுப்பித்து வர்ணம் தீட்டியும் மதில்கள் அனைத்திலும் சிமெண்ட் பூச்சும் செய்து ரிஷபங்கள் அமைத்தும் புதிதாய் தென்கைலாயம், வட கைலாயத்தில் மண்டபங்கள், இரண்டாம் கீழ கோபுர வாசல்

கதவுகள் அமைத்தும், ஸ்ரீ சுவாமி, ஸ்ரீ அம்பாள் விமான கலசங்களுக்கு தங்க தகடுகள் பதித்தும் 63 நாயன்மார்கள் வகையறா செப்புத் திருமேனிகள் செய்யப்பட்டும் ஸ்ரீ சுவாமி, ஸ்ரீ அம்பாள் சன்னதிகள் முகப்பில் தோரண வாயில்கள் அமைத்து மின் வேலைகள் செய்தும் முழுமையாக திருப்பணிகள் செய்விக்கப்பட்டு ஸ்ரீ நந்தன ஆண்டு தைத்திங்கள்25 ஆம் நாள் 7 2 2013 வியாழக்கிழமை அன்று ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நிகழ்வுற்றது.

**தமிழக சுவரோவியங்கள் ஓர் அறிமுகம்**

தமிழகத்தில் ஓவியக்கலை சங்க காலத்திலேயே முழு வளர்ச்சி பெற்ற நிலையில் இருந்துள்ளது என்பதற்கு பல சமகால இலக்கியங்கள் சாட்சியாக உள்ளன. சித்திர மண்டபங்களும், சித்திர மாடங்களும், சித்திரச் சாலைகளும், எழுத்து மண்டபங்களும் பரவலாக இருந்துள்ளன. கலையில் ஆர்வமிக்கவர்கள் அக்கூடங்களுக்குச் சென்று அந்த ஓவியங்களைக் கண்டு ரசித்தும் அது குறித்து கலந்துரையாடியும் இருந்தனர் என்பதுக்கு பரிபாடல், புறநானூறு, மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களே சாட்சியாக இருந்து வருகின்றன.

தமிழ்நாட்டில் இப்பொழுது காணப்படும் சுவரோவியங்களில் மிகவும் தொன்மையானவை பல்லவர் காலத்தவையே ஆகும். அதாவது ஏறக்குறைய கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் தொடக்கத்திலிருந்து தான் சுவரோவியங்கள் காணப்படுகின்றன. இதற்கு முன்னர் வரையப்பட்ட ஓவியங்கள் கால ஓட்டத்தில் மறைந்து விட்டன. பல்லவ மன்னர்களில் கலை, இலக்கியம், இசை ஆகியவற்றில் அறிவாற்றல் மற்றும் தேர்ச்சி உடையவராக இருந்தவர்கள் முதலாம் மகேந்திரவர்மனும், இராஜசிம்ம பல்லவனும் ஆவர். மாமல்லபுரம் கோயில்கள், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் மற்றும் பனமலை தாளகிரீஸ்வரர் கோயில் ஓவியங்கள் இவர்களது படைப்புகளுக்குச் சாட்சியாக உள்ளன. வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூருக்கு அருகே உள்ள ஆர்மாமலை எனும் ஊரில் உள்ள

மலைக் குகை ஒன்றில் சுமார் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் சமணத்துறவிகள் வாழ்ந்து வந்துள்ளனர். இக்குகையின் கூரைப்பகுதிகளில் தாமரைத்தடாகம் ஓவியமாக வரையப்பட்டுள்ளது.

பாண்டியர் கைவண்ணத்தில் சுமார் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் உருவான ஓவியங்கள் புதுக்கோட்டை மாவட்டம், சித்தன்னவாசலில் உள்ள சமணக் குடைவரைக் கோயிலின் கருவறை மற்றும் அர்த்த மண்டப கூரைகள், தூண்கள் மற்றும் போதிகைகளில் காணப்படுகின்றது. இங்கு தாமரைத்தடாகம், அரச குடும்பத்து மனிதர்கள், ஆடல் மகளிர் மற்றும் அலங்கார ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. பாண்டியர் காலத்தைச் சேர்ந்த பிற ஓவியங்கள் இருந்ததற்கான எச்சங்கள் மதுரைக்கருகில் ஆனைமலை, கீழவளவு, கீழக்குயில்குடி ஆகிய சமணத் தலங்களில் காணப்படுகின்றது.

சோழர் கால ஓவியங்களில் தொன்மையாக கருதப்படுவது விஜயாலய சோழீஸ்வரத்தில் உள்ள கி.பி. 9-ஆம் நூற்றாண்டு ஓவியங்களேயாகும். அதற்கு அடுத்தப்படியாக எஞ்சி உள்ளது வரலாற்றுச் சிறப்பு மிக்க தஞ்சாவூர் பெரிய கோயில் ஆகும். இங்கு சிவபெருமானின் தடுத்தாட்கொண்ட புராணமும், பிற புராணங்களும் ஓவியங்களாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு இடைப்பட்ட காலங்களில் எழுப்பப்பட்ட காலத்து கோயில்களில் ஓவியங்கள் காணப்படவில்லை ஒரு வேளை அழிந்து போயிருக்கலாம்.

சோழர்களைத் தொடர்ந்து போசளர் கைவண்ணத்தில் உருவான ஓவியங்கள், திருவரங்கத்தில் உள்ள குழலூதும் பிள்ளை கோயில் முன் மண்டப விதானத்தில் சில ஓவியங்கள் எஞ்சியுள்ளன. இங்கு கண்ணன் கோபியருடன் இருக்கும் காட்சிகள் வரையப்பட்டுள்ளன.

சோழர் மற்றும் பாண்டியர்களின் வீழ்ச்சிக்குப் பின்னால் மீண்டும் மரபுக் கலைகள் விஜயநகர நாயக்க மன்னர்களால் கி.பி.14-ஆம், நூற்றாண்டுக்குப் பின் புத்தாக்கம் பெற்று வளர துவங்கிற்று. காஞ்சிபுரம் அருகே உள்ள திருப்பருத்திக்குன்றம் சமணர் கோயிலில் விஜயநகர மன்னன் புக்கனின் அமைச்சராக இருந்த இருகப்பா என்பவர் முயற்சியில் சங்கீத மண்டபம் எழுப்பி அதன் கூரையில் தீர்த்தங்கரர்களின் வாழ்க்கை வரலாற்று ஓவியங்கள் வரையப்பட்டுள்ளது. தொடர்ந்து விஜயநகர – நாயக்க மன்னர்களின் ஆட்சிக்காலங்களில் கட்டப்பட்ட பல கோயில்களில் புதிய மண்டபங்கள் எழுப்பப்பட்டு அதில் ஓவியங்கள் தீட்டப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை அழிந்திருப்பினும் திருவண்ணாமலை, திருவலஞ்சுழி, பட்டீஸ்வரம், திருவெள்ளறை, திருவரங்கம், அழகர்கோயில், திருப்புடைமருதூர், செங்கம், அதியமான்கோட்டை போன்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட கோயில்களில் இவர்களது ஓவியங்கள் இன்றளவுக்கும் காணக்கிடைக்கின்றன.

நாயக்கர்கள் ஆட்சி புரிந்த காலக்கட்டங்களில், தென் தமிழகத்தில் இராமநாதபுரத்தை மையமாக கொண்டு ஆண்டு வந்த சேதுபதி மன்னர்களாலும் ஓவியக்கலை பெரிதும் வளர்க்கப்பட்டது. இவர்களது ஓவியங்கள் இராமநாதபுரத்தில் உள்ள இராமலிங்க விலாசம் எனும் அவர்களது அரண்மனையில் காணப்படுகின்றது. இங்கு கி.பி.18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இராமாயணக்காட்சிகள் தொடர் ஓவியங்களாக உள்ளன. மேலும் அரண்மனை அந்தப்புர வாழ்வியல் காட்சிகள் விளக்கமாக வரையப்பட்டுள்ளன.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

தஞ்சாவூரை மையமாக கொண்டு கி.பி.18-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மராத்திய மன்னர்களும் ஓவியக் கலையை பெரிதும் ஆதரித்தனர். இவர்களது ஓவியங்கள், தஞ்சாவூர், வெண்ணாற்றங்கரை, திருவலஞ்சுழி, ஆவுடையார்கோயில் போன்ற கோயில்களிலும் அரண்மனைகளிலும் காணக்கிடைக்கின்றன. இவர்களது காலத்தில் வட இந்திய மற்றும் மேற்கத்தியப் பாணியுடன் உள்ளூர் மரபும் சேர்ந்து புதிய பாணிகளில் ஓவியங்கள் வளர்ந்தன. புராணக்கதைகளை நீண்ட தொடர் ஓவியமாக வரையும் மரபு குறைந்து கடவுள் மற்றும் அரசர்களின் உருவப்படங்கள் பெரிய அளவில் வரையப்பட்டன. ஐரோப்பியர் வருகைக்குப் பின் மரபு கலைகள் வீழ்ச்சியுற்று மேற்கத்திய பாணி ஓவியங்கள் வளர தொடங்கிற்று.

தமிழகத்தில் முதல்முறையாக மல்லப்பாடி என்ற இடத்தில் சென்னை பல்கலைக்கழகத் தொல்லியல் துறையால் கிபி 1980ல் புதிய கற்காலத்தைச் சேர்ந்த ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கீழ் வாழை என்ற இடத்தில் அனந்தபுரம் கிருஷ்ணமூர்த்தி என்பவரால் 1980ல் தொல் பழங்கால ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டு தெரியவந்துள்ளன. ஓவியக் கலைஞனின் ஆற்றலும் அனைவரையும் கவர்ந்து இழுத்து இருக்கிறது. உதாரணமாக,

“சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனை தோறும் மை
ஏறு படிவத்து வானவர் முதலாக எவ்வகை
உயிர்களுக்கும் ஓமங்காட்டி வெண்சுதை விளக்கத்து
வித்தகர் இயற்றிய கண் கவர் ஓவியம் கண்டு நிற்குணரும்”

என்கிறது, மணிமேகலை (3127 – 137) தெய்வங்கள் முதல் பல வகை உயிர்களும் ஓவியங்களாக சுவர்களில் வரையப்பட்டிருந்ததை இவ்வடிகள் கூறுகின்றன.

இங்கிருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் சந்திரனுக்குரிய தலமான திங்களூர் அமைந்திருக்கிறது. திங்களூரில் சந்திரனை தரிசிப்பவர்கள் இங்கு வந்து ஐயாறப்பனை தரிசித்தால் தான் முழு பலன் பெறமுடியும் என்பது மரபு. சந்திரன் சஸ்யாததிபதி, சூரியனின் கதிரை வாங்கித்தான் அருள் பாலிக்கிறான். எனவே, திருவையாற்றில் சூரியன் வழிபட்டதாலும், ஸ்ரீ ராமன் வழிபட்ட தலமானதாலும் இங்கு வழிபாடு செய்தல் சிறந்த பயனுடையது. இத்தலம் தருமபுரம் ஆதீனத்தைச் சேர்ந்தது. இத்திருக்கோவிலில் பழமையான சுவரோவியங்கள் காணப்படுகின்றன. இந்த சுவரோவியங்கள் தஞ்சை மராத்திய மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் வரையப்பட்டவை என்பதை நூல்கள் மூலமும், கள ஆய்வின் மூலமும் அறிந்து கொள்ளலாம். சுவரோவியங்கள் கோவிலின் சித்திரமாடம் என்று அழைக்கப்படுகின்ற திருச்சுற்று மண்டப சுவர்களில் காணப்படுகின்றன.

**சுவரோவியங்களின் அமைப்பு:**

சுவர் பகுதி செவ்வக வடிவமைப்பில் மூன்று பகுதிகளாக நீளவாக்கில் பிரிக்கப்பட்டுள்ளது. மிக நீண்ட தொடர்களாக ஓவியங்கள் தீட்டப்பட்டு இருக்கின்றன. சுவர் பகுதி செவ்வக வடிவத்தில் ஆங்கில எழுத்தான "L" போன்ற அமைப்பில் காணப்படுகிறது. இச்சுவரோவியங்களில், திருவையாறு ஐயாறப்பர் தலத்தின் பெருமைகளை விளக்கிக் கூறுவது போல் பல்வேறு கதைகள், தலத்தில் நிகழும்

திருவிழாக்கள் போன்ற
காட்சிகளை வண்ண ஓவிய தொகுப்புகளாக வரைந்து உள்ளனர். ஓவியத்தில் இடம்பெற்றுள்ள காட்சிகளின் விளக்கங்கள் அந்தந்த ஓவியத்தின் மேல் பகுதியில் எழுதப்பட்டிருக்கின்றன. மூன்று பகுதிகளில் சுற்றிலும் அலங்கரித்து வரையப்பட்டுள்ள தலப்பெருமையை விளக்கும் ஓவியங்களைத்தவிர்த்து, பிற ஓவியங்களாக மாட்டுப்பொங்கல், மாடு விரட்டல் (தற்போதைய ஜல்லிக்கட்டு போன்ற) வேள்வி வளர்த்தல், சிவலோகம், காட்டில் இருக்கின்ற முனிவருடன்- மரம், மான், புலி, சிங்கம் போன்ற உயிரினங்கள், அக்கால வணிகம், காதல் காட்சிகள், கணவன் மனைவி இருவரும் குடும்பம் நடத்தும் பாங்கு போன்ற காட்சிகள் வரையப்பட்டிருக்கின்றன.

**காலம்:**

ஐயாறப்பர் கோவில் சித்திர மண்டபத்தில் உள்ள சுவரோவியங்கள், இரண்டாம் சாகாஜி மன்னர் ஆட்சி செய்த காலமான, கிபி 1684 -1712 ஆம் ஆண்டுகளிலோ அல்லது அவர் ஆட்சிக்குப் பின்னரோ இக்கோவிலில் வரையப்பட்டிருக்க வேண்டும்.

**சுவர் ஓவியம் வரைந்த முறை:**

தஞ்சை மராத்திய மன்னர்கள் கோவில், அரண்மனை, சத்திரம், தர்பார் கூடம் ஆகியவற்றின் சுவர்களிலும், விதானங்களிலும் (மண்டபங்களின் மேற்கூரையின் உட்புறம்) பல வண்ண ஓவியங்களை தீட்டி இருக்கின்றனர். அவைகள் யாவும் டெம்பரா என்றழைக்கப்படும் பற்றோவிய முறையில் வரையப்பட்டிருக்கின்றன. ஆகவே ஐயாறப்பர்கோவில் ஓவியமும் (டெம்பரா) பற்றோவிய முறையிலேயே வரையப்பட்டிருக்கின்றன. இந்த சுவர் ஓவியங்களை சில ஆண்டுகளுக்கு முன்னர் மேல் வண்ணப்பூச்சு செய்து உள்ளனர். சுவரோவியத்தின் ஒரு பகுதியின் ஓரத்தில் (வர்ண வேலை 27-11-1958) என்று குறிப்பிட்டுள்ளனர். முழுப்பகுதியையும் மேல்வண்ணப்பூச்சு செய்தனரா என்பது சரியாக தெரியவில்லை.

**டெம்பரா ஓவிய முறை:**

டெம்பெரா (முட்டை டெம்பரா என்றும் அழைக்கப்படுகிறது) என்பது ஓவியத்தினை வரையப்பயன்படுத்தும் ஒரு முறையாகும். இது என்காஸ்டிக் எனப்படும் உருகியமெழுகு ஓவிய முறைக்கு மாற்றாகவும், எண்ணெய் ஓவியத்திற்கு மாற்றாகவும் பயன்படுத்தப்பட்டது. இந்தப்பெயர் லத்தீன் வார்த்தையான டெம்பரேரிலிருந்து வந்ததுள்ளது, அதாவது 'விகிதத்தில் கலப்பது'. வண்ண நிறமிகளை பிணைக்க தேன் மெழுகு கொண்ட என்காஸ்டிக் வண்ணப்பூச்சுகள் அல்லது எண்ணெய்களைப் பயன்படுத்தும் எண்ணெய் வண்ணப்பூச்சுகளைப் போலல்லாமல், டெம்பரா - தண்ணீர், முட்டையின் மஞ்சள் கரு அல்லது முழு முட்டையுடன் சேர்த்து (எப்போதாவது சிறிது பசை, தேன் அல்லது பாலுடன்) ஒரு குழம்பைப் போல பயன்படுத்தும் முறையாகும். டெம்பரா ஓவிய முறையானது தமிழில் பற்றோவிய முறை என்று அழைக்கப்படுகிறது. இந்த முறையில் ஓவியங்கள் வரையப்படுபவதற்கு முன்பாக, கருங்கல்லால் கட்டப்பட்ட சுவர்களில் சீரான தன்மையை உருவாக்க சுண்ணாம்புநீர் (கலவை) மற்றும் மணல், சுவற்றில் ஒட்டுவதற்கான பொருட்களை (முட்டையின் வெள்ளைக்கரு, கடுக்காய், வெல்லம், மரப்பிசின், தண்ணீர் - தண்ணீருக்கு பதிலாக சில நேரங்களில்

கொழுப்பு நீக்கப்பட்ட பாலும்) சேர்த்து, ஊறவைத்து, குழைத்து ஒரு சமமான செங்குத்துத்தளத்தை உருவாக்குவார்கள். அதன் பிறகு சுண்ணாம்பை சலித்து, நன்கு சுவற்றுடன் ஒட்டிக்கொள்ளக்கூடிய பொருட்களையும் சேர்த்து, அரைத்து மை போன்ற நிலையில் குழப்பி மேற்பூச்சாக, முன்பே உருவாக்கப்பட்டிருக்கும் சுவர்களில் பூசுவார்கள். அவ்வாறு பூசப்பட்ட சுண்ணாம்புக் கலவையின் ஈரம் காய்வதற்கு முன்பாகவே அதன் மீது மிகச்சிறிய தூரிகைகளினால், நன்கு பயிற்சியும் அனுபவமும் பெற்ற ஓவியர்களைக் கொண்டு, வரையப்பட வேண்டிய ஓவியங்களை மிக மெல்லிய கோடுகளைக் கொண்ட கோட்டோவியங்களாக கருப்பு மையினால் வரைவார்கள். அதன் பிறகு இயற்கை தாது பொருட்களைக் கொண்டும், மூலிகைகளின் சாறுகளைக் கொண்டும் உருவாக்கப்பட்ட வண்ணங்களை பயன்படுத்தி ஓவியத்தினை நிறைவு செய்வார்கள். இப்படி நிறைவு செய்யப்பட்ட ஓவியங்களுக்குரிய கதைக்கான கருப்பொருளை ஓவியத்திற்கு மேலே கருப்பு வண்ணம் பூசப்பட்ட பகுதியில் வெள்ளை வண்ணத்தை கொண்டு எழுதுவார்கள். இவ்வாறு நான்கு நிலைகளில், நான்கு விதமான குழுக்களாக சேர்ந்து இந்த பற்றோவிய முறை ஓவியங்கள் கோயில்களிலும், அரண்மனைகளிலும், சத்திரங்களிலும் முழுமையாக வரையப்பட்டிருக்கின்றன.

**தென் கைலாயத்தில் உள்ள சுவரோவியம்:**

திருவையாறு ஐயாறப்பர் கோயில்வளாகத்தில் உள்ளே தென் கைலாயம் என்று தனி சன்னதி உள்ளது. தென்கைலாய சன்னதியில் மேல் விதானத்தில் (மேற்கூரை உட்புறச்சுவரில்) அப்பர் பெருமானின் வாழ்க்கை

வரலாற்றை ஓவியமாக வரைந்து உள்ளனர். இந்த ஓவியம் 16ம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று நூல்களின் வாயிலாக தெரிந்து கொள்கிறோம்.

**கோவில் சுவரில் உள்ள சுவரோவியங்களின் கதைகள்**

**1) பிரிய விருத்தர் கோவில் கட்டுவித்தது:**

பிரியவிருத்தர் என்னும் மன்னர் தேரில் வருகின்றார், வழியில் ஒரு காட்டில் தேர் செல்ல முடியாமல் நின்று விடுகிறது. தேரில் நின்று கீழ் இறங்கிய மன்னர் அக்காட்டில் தவம் இருக்கின்ற முனிவர் ஒருவரை பார்த்து வணங்கி அவரிடம் ஞான அறிவு பெறுகின்றார். பின்னர், அக்காட்டில் சுயம்புவாய் தோன்றி

இருக்கின்ற லிங்கத் திருமேனியை கண்டு வழிபடுகின்றார். அதே இடத்தில் இறைவனுக்கு கோவில் கட்ட விரும்பிய மன்னர் உடனே அச்செயலை நடைமுறைப்படுத்துகின்றார். மிக விரைவில் கோயில் கட்டி முடிக்கப்படுகிறது. கோயில் கட்டியவர்களுக்கு மன்னர் பரிசுகள் வழங்குகின்றார். மன்னர் இத்தல பெருமைகளை பலருக்கு சொல்கின்றார்.

**2) கௌதமர் வழிபட்ட கதை:**

ஒரு சமயம் நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்ட பொழுது மிகவும் துன்பத்திற்கு உள்ளாகிய மக்கள் திருச்சோற்றுத்துறையில் இருந்த கௌதமரை நாடி செல்கின்றனர். கௌதம முனிவர் அவர்களுக்கு உணவு, உடைகள் போன்றவற்றை கொடுத்து காப்பாற்றுகின்றார். பஞ்சம் நீங்கி நாடு செழித்த பின்னர் மக்கள் தங்கள் ஊருக்கு செல்ல விரும்புகின்றனர். ஆனால், விருந்தினராக வந்த அவர்களை

விட்டு பிரிய மனமின்றி வருந்தினார் கௌதமர். இதனை அறிந்த மக்கள் ஒரு மாயப்பசுவை உண்டு பண்ணி முனிவர் முன்னிலையில் அனுப்பினர். அப்பசுவை முனிவர் தொட்டவுடன் அது பூமியில் விழுந்து இறந்து விடுகிறது. அச்செயலை கண்ட மக்கள் பசுக்கொலை புரிந்த முனிவர் ஆசிரமத்தில் இருந்து விருந்து உண்டால் அப்பாவம் தங்களுக்கும் நேரும் என்று சொல்லி தங்கள் ஊருக்கு சென்று விடுகின்றனர்.

இப்பாவத்தை போக்குவதற்காக வேள்வி ஒன்று வளர்க்கின்றார். காவிரியில் மூழ்கி ஐயாறப்பர் கோவிலுக்கு சென்று வழிபடுகின்றார். பின்னர் தேரில் சிவன் உலகத்திற்கும் திருமால் உலகத்திற்கும் செல்கின்றார்.

**3) சிலாத முனிவர் வழிபட்டு குழந்தை பெற்ற கதை:**

சிலாத முனிவர் தம் வீட்டுக்கு வந்த ஒரு பிராமணருக்கு விளையாட்டாக அவர், தன்னையறியாமல் அன்ன பாத்திரத்தில் ஒரு சிறு கல்லை விட்டு விடுகிறார். அப்பிராமணர் அச்சிறு கல்லை அன்னத்துடன் சேர்த்து சாப்பிட்டு விடுகிறார். சிலாத முனிவர் தம் தவ வலிமையினால் காலன் இருக்கும்

இடத்திற்கு செல்கிறார். அங்கு புண்ணியம் செய்தவர்கள் விமானத்தில் செல்வதையும், பாவம் செய்தவர்கள் கால தூதுவர்களால் பலவாறு கொடுமைப்படுத்தப்படுவதையும் காண்கிறார். காலனின் இருக்கைக்கு அருகில் ஒரு பெரும் பாறை இருப்பதைக் கண்டு யாது காரணம் என்று வினவுகிறார். அதற்கு காலன் ஒரு வேதிய சிறுவன் ஓர் அதீதியின் அன்னத்தில் கல் இட்டதால் அவன் வயது வளரும் தோறும் இது வளர்ந்து பெரும் பாறை ஆகிறது, அவன் இங்கு வரும் பொழுது இப்பாறையை உணவாக உட்கொள்ள வேண்டும், அப்படி செய்தால் தான் அவன் பாவம் தொலையும் என்று கூறுகிறான்.

அதன் பின்னர், திரும்பி வந்து கல்லை பொடி செய்து சாப்பிடுகிறார். முனிவர் தமக்கு வேண்டி தவம் செய்ய, சிவபெருமான் அவர் முன் தோன்றி நீ விருத்தகநாதளால் குழந்தை பிறப்பு உன் மனைவியிடம் அரிதாகும் ஆதலால் நீ வேள்வி செய்து அப்பேற்றை அடைவாய். நீ வேள்வி செய்ய வேண்டி நிலத்தை உழவுசெய், வயலில் ஒரு புதல்வன் உனக்கு உண்டாவான், அவன் எனக்கு சமமானவன் என்று கூறினார். அதன்படி சிலாதர் வயலில் கலப்பை கட்டி ஏர் உழுகிறார், பெட்டி ஒன்றில் ஒரு ஆண் குழந்தை இருக்க கண்டு டெடுத்து தம் மனைவியிடம் கொடுக்கின்றார். குழந்தையை இருவரும் மகிழ்ச்சியுடன் வளர்த்து

வருகின்றனர்.

**4) நந்திக்கு அருளிய கதை:**

நந்தி தேவரை பூவுலகில் சிலாத முனிவருக்கு மகனாக பிறக்க வேண்டும் என்று மாலை சூட்டி சிவபெருமான் அனுப்புகின்றார். அதன்படி சிலாத முனிவருடைய மகனாக நந்திதேவர் சித்தியச்சுடர் என்ற பெயரில் பிறந்து வளர்ந்து வருகிறார். இவர் திருவையாற்றில் கங்கை, உமையவள், சந்திரன், சூரியன், காளை வாய் நுரை ஆகிய ஐவகை தீர்த்தங்களால் சிவபெருமானுக்கு திருமுழுக்கு செய்து வழிபடுகின்றார். ஆதலால் மகிழ்ந்த பெருமான் மூவிதக் கைகளும் திருவடி தீக்கையும் செய்து நந்தி

தேவர் என்னும் பெயரை சாற்றி சாரூப்பியம் கொடுத்து அருள் செய்கின்றார்.

**5) சுரத மன்னர் வழிபட்ட கதை:**

சுரத மாமன்னருக்கும் அரக்கர்களுக்கும் கடும் போர் நடக்கிறது. சர்வசித்து என்னும் அரக்கர் தலைவனை இப்போரில் மன்னர் தோற்றோடச் செய்கிறார். அதன் பின்னர் தம் துணையுடன் திருவையாற்றுக்கு வருகின்றார். காவிரியில் இருவரும் மூழ்கி எழுந்து சிவபெருமானை வழிபடுகின்றனர். அதன் பலனாக அவர்களுக்கு ஒரு மகன் பிறக்கின்றான். அதனால் உண்டான மகிழ்ச்சியை கொண்டாடும் விதத்தில் திருவையாறு கோவிலில் திருவிழாவிற்கு மன்னர் ஏற்பாடு செய்கிறார். முதல் நாள் கொடியேற்றப்படுகிறது, இரண்டாம் நாள் சேஷ (பாம்பு) வாகனத்திலும், மூன்றாம் நாள் பூத வாகனத்திலும், நான்காம் நாள் கைலாச வாகனத்திலும், ஐந்தாம் நாள் சதுர்முக சப்பரத்திலும், ஆறாம் நாள் யானை வாகனத்திலும், ஏழாம் நாள் ரதத்திலும், எட்டாம் நாள் குதிரை வாகனத்திலும், ஒன்பதாம் நாள் தேரிலும், பத்தாம் நாள் மலர் பல்லக்கிலும், இறைவன் எழுந்தருளி திருவீதிஉலா வருகின்றார். 10 நாட்கள் விழா முடிந்த பின்னர் 11 வது நாள் நீராட்டு விழாவும், 12 ஆம் நாள் கொடி இறக்குதலும் நடைபெற்று இருக்கின்றன.

6) தந்தையைக் கொன்ற பாவம் போக்கிய கதை:

தன் தாயை மனைவியாக கொண்டு மகிழ்ச்சியுடன் இருப்பதை பார்த்த தகப்பனை, மகனே கோடாரியால் வெட்டி விடுகிறான். தன் தந்தையை கொன்ற பாவத்திற்கு ஆளான அவனை ஊரில் உள்ள ஏனையோர் விரட்டி விடுகின்றனர். இப்பாவத்தை போக்குவதற்காக அவன் திருவையாற்றுக்கு வருகிறான், காவிரியில் மூழ்கி பெருமானை வழிபடுகிறான். இதனால் பாவம் நீக்கப்படுகிறது, தேவர்கள் இவனை விமானத்தில் அழைத்துச் செல்கின்றனர். அவனை தன் மடியில் கிடத்தி அவன் வலதுக்காதில் தாரகோபதேசம் செய்து சாய்ச்சியம் கொடுக்கிறார், உமையவள் தம் முந்தானையால் அவனுக்கு விசுறுகிறாள்.

**முடிவுரை:**

திருவையாறு ஐயாறப்பர் கோவிலில் வரையப்பட்டுள்ள சுவரோவியங்கள், காலம் கடந்தும் அழியா புகழைப் பெற்றுள்ளது. அடுத்த தலைமுறைக்காக பாதுகாத்து தரப்பட வேண்டிய நிலையில் உள்ள ஓவியங்கள் அனைத்தும் பாதி உதிர்ந்த நிலையிலும், மீதி அழிந்த நிலையிலும் உள்ளன. கடந்த 1958 மற்றும் 2013ம் ஆண்டுகளில் கோவில் குடமுழுக்கு திருப்பணிகளின் போது பழைய ஓவியங்களை புதுப்பிப்பதாக நினைத்து, முறையான பயிற்சியும், அனுபவமும் இல்லாத உள்ளூர் ஓவியர்களை கொண்டு, முதலில் ஓவியங்கள் உருவாக்கப்பட்ட வண்ணங்களுக்கு பதிலாக அவர்கள் திருப்பணி செய்த காலகட்டத்தில் கிடைத்த வண்ணங்கள் மற்றும் பொருள்களைக் கொண்டு ஓவியங்களின் மேல் வண்ணங்களை பூசி உள்ளார்கள் என்பது நேரில் சென்று செய்யப்பட்ட கள ஆய்வின் மூலம் தெரியவருகிறது. இன்றைய நிலையில் நாம் ஓவியங்களை பார்க்கும் போது புதுப்பிக்கப்பட்ட ஓவியங்கள் பாதிக்கும் மேல் நிறைவு செய்யப்படாமல், அரைகுறையாக - நமக்கும், பார்வையாளர்களுக்கும் மிகுந்த மன உளைச்சலை தருகிறது. தப்பித்திருக்கிற பழைய ஓவியங்களில்

வண்ணங்கள் மனநிறைவை அளித்தாலும், பாதிக்கப்பட்ட ஓவியங்கள் அதிகமாக இருப்பதால் மனம் மகிழ்ச்சியில் லயிக்க இயலவில்லை. இந்த திருவையாறு ஐயாறப்பர் கோவில் சுவரோவியங்களை பழமை மாறாமல் புதுப்பித்து, பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு தர வேண்டியது நமது கடமையாகும்.

**துணை நூற்பட்டியல்:**

1.தமிழகச் சுவரோவியங்கள் - முனைவர் ஆ.பத்மாவதி - தேர்வுநிலைக் கல்வெட்டாய்வாளர் - பக்கம் - 33.ல்.

2. அகில இந்திய இந்து திருத்தலங்கள் -

ஏ. ஐயப்ப செட்டியார் என்ற வானமாலை ராமானுஜதாசன் - பக்கம் 204 - 51.

3. தஞ்சை மராத்திய மன்னர்கள் வளர்த்த நுண்கலைகள்- முதுமுனைவர்.ம.சா.அறிவுடைநம்பி - 2006 - பக்கம் – 97.

4. திருவையாறு ஐயாறப்பர் திருக்கோயில் தலவரலாறு - புலவர் கோ.சுப்பிரமணியனார். 2006 - பக்கம் – 80.

**மேற்கோள் குறிப்புகள்:**

1.சிலப்பதிகாரம்

2.மணிமேகலை

3.புறநானூறு

4.தேவாரம்